HMD

12 - ஆம் வகுப்பு

காலம் : 3.00 மணி

# அரையாண்டுப் பொதுத் தேர்வு - 2023

# பொது தமிழ்

1 2 0 1 6

மதிப்பெண்கள் : 90

## பகுதி - I

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. 14X1 = 14

1. "விண்வேறு, விண்வெளியில் இயங்குகின்ற வெண்மதியும் செங்கதிரும் முகிலும் வேறு" - இத்தொடர் தரும் முழுமையான பொருள் அ) விண்ணும் வெண்மதியும் வேறுவேறு ஆ) விண்வெளியும் செங்கதிரும் வேறு வேறு இ) வெண்மதியும் முகிலும் வேறுவேறு ஈ) விண், விண்வெளியில் உள்ள வெண்மதி, செங்கதிர், முகில் அனைத்தும் வேறுவேறு
2. திண்ணியர் என்பதன் பொருள் அ) அறிவுடையார் ஆ) மன உறுதி உடையவர் இ) தீக்காய்வார் ஈ) அறிவிலார்
3. இலக்கியத்தையும் மொழியையும் ஒருசேரப் பேசுகின்ற இலக்கண நூல் அ) யாப்பருங்கலக்காரிகை ஆ) தண்டியலங்காரம் இ) தொல்காப்பியம் ஈ) நன்னூல்
4. நரம்புகளுக்குள் வீணை மீட்டிக் கொண்டிருக்கிறது என்று அய்யப்ப மாதவன் குறிப்பிடுவது அ) சூரிய ஒளிக்கதிர் ஆ) மழை மேகங்கள் இ) மழைத் துளிகள் ஈ) நீர்நிலைகள்
5. இவற்றை வாயிலுக்கே சென்று இன்முகத்துடன் வரவேற்பாயாக என்று ஜலாலுத்தீன் ரூமி குறிப்பிடுவது அ) வக்கிரம் ஆ) அவமானம் இ) வஞ்சனை ஈ) இவை அனைத்தும்
6. எங்கள் தந்தையர் நாடென்ற பேச்சினிலே ஒரு சக்தி பிறக்குது மூச்சினிலே என்னும் பாரதியின் பாடல் வெளிப்படுத்துவது அ) தனிக் குடும்ப முறை ஆ) விரிந்த குடும்ப முறை இ) தாய்வழிச் சமூக முறை ஈ) தந்தைவழிச் சமூக முறை
7. "உள்ளொன்று வைத்துப் புறம் ஒன்று பேசுவார்" - இத்தொடர் உணர்த்தும் பண்பு அ) நேர்மறைப் பண்பு ஆ) எதிர்மறைப் பண்பு இ) முரண் பண்பு ஈ) இவை அனைத்தும்
8. தமிழில் திணைப் பாகுபாடு .................... அடிப்படையில் பகுக்கப்பட்டுள்ளது. அ) பொருட் குறிப்பு ஆ) சொற் குறிப்பு இ) தொடர்க் குறிப்பு ஈ) எழுத்துக் குறிப்பு
9. பொருள் குழப்பமின்றி எழுதுவதற்குரிய காரணங்களுள் பொருந்துவதைத் தேர்க. அ) தேவையான இடங்களில் இடைவெளி விடாமல் எழுதுதல் ஆ) தேவையற்ற இடங்களில் இடைவெளி விட்டு எழுதுதல் இ) நிறுத்தக் குறிகளை உரிய இடங்களில் இட்டு எழுதுதல் ஈ) வல்லின மெய்களைத் தேவையான இடங்களில் இடாமல் எழுதுதல்
10. "குழிமாற்று" எந்தத் துறையோடு தொடர்புடைய சொல்? அ) இலக்கியம் ஆ) கணிதம் இ) புவியியல் ஈ) வேளாண்மை
11. சங்க இலக்கியத்தில் இல்லாத சொற்கள், சங்ககால சமூகத்தில் நடைமுறையில் இருந்துள்ளன. அவை ............ அ) அறவோர், துறவோர் ஆ) திருமணமும் குடும்பமும் இ) மன்றங்களும் அவைகளும் ஈ) நிதியமும் சுங்கமும்
12. 'இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும்' என்னும் புணர்ச்சி விதிக்குரிய சொல் அ) தலைக்கோல் ஆ) செங்கோல் இ) முன்னுடை ஈ) செழித்திருந்தால்
13. யானை புக்க புலம் போல - இவ்வுவமைக்குப் பொருத்தமான தொடர் அ) தனக்குப் பயன்படும், பிறருக்குப் பயன்படாது ஆ) தனக்கும் பயன்படாது, பிறருக்கும் பயன்படாது இ) பிறருக்குப் பயன்படும், தனக்குப் பயன்படாது ஈ) தனக்கும் பயன்படும், பிறருக்கும் பயன்படும்
14. பேச்சுத் தமிழில் அமைந்த தொடரைத் தேர்க. அ) அவருக்கு நல்லது கெட்டது நல்லாத் தெரியும் ஆ) புத்தகக் கண்காட்சி நடைபெறுகிறது இ) வறட்சி எல்லா இடங்களையும் பாதித்துள்ளது ஈ) மயில்கள் விறலியரைப் போல் ஆடுகின்றன

## பகுதி - II - பிரிவு -1

எவையேனும் மூன்றனுக்கு விடை தருக. 3 X 2 = 6

15. ஒருமுக எழினி, பொருமுக எழினி - குறிப்பு எழுதுக.
16. செல்வம் இருப்பதற்கான வழியாக வள்ளுவம் உரைப்பன யாவை?
17. இறைமகனாரின் இன்னலைக் கண்டு மக்கள் எவ்விதம் புலம்பினர்?
18. கவிஞர் சிற்பி எவற்றை வியந்துபாட தமிழின் துணை வேண்டுமென்கிறார்?

பிரிவு - 2 எவையேனும் இரண்டனுக்கு விடை தருக. 2 X 2 = 4

19. நடை அழகியல் பற்றித் தொல்காப்பியம் கூறும் கருத்தைக் குறிப்பிடுக.
20. 'மையாடல் விழா' என்றால் என்ன?
21. தமிழர் வளர்த்த அழகுக்கலைகள் நூல் குறித்து எழுதுக.

பிரிவு - 3 எவையேனும் ஏழனுக்கு விடை தருக. 7 X 2 = 14

22. மயங்கொலிச் சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக.
அ) கலை, களை, கழை **(அல்லது)** ஆ) கான் - காண்.
23. கலைச் சொல் தருக. அ) Folder ஆ) Passport
24. பொருத்தமான வேற்றுமை உருபுகளைச் சேர்த்து முறையான தொடர்களாக ஆக்குக.
அ) காலை எழுந்து படித்து நமக்கு நன்மை ஏற்படும் ஆ) சான்றோர் மதிப்பு கொடுத்து வாழ்வு உயரலாம்



Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com

25. ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக. அ) ஈந்த ஆ) சாய்ப்பான்

26. கீழ்க்காணும் தொடர்களில் அடைப்புக்குள் உள்ள பெயர்ச்சொல்லைத் தொடர்களுக்கு ஏற்றவாறு மாற்றி எழுதுக.
அ) முருகன் ...................... (வேகம்) சென்றும் பேருந்தைப் பிடிக்க இயலவில்லை.
ஆ) உங்களுக்கு ...................... (யார்) நன்மை என நினைக்கிறீர்கள்.

27. ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக. அ) பூம்பாவாய் ஆ) அருங்கானம்

28. சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க. அ) பலகை ஆ) தலைமை

29. உரிய இடங்களில் வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக. i) என்னுடைய நம்பிக்கை முழுவதும் புதிய தலைமுறை மீதுதான் அவர்கள் எல்லா பிரச்சினைகளையும் ஒரு சிங்கத்தை போல எதிர்கொண்டுத் தீர்ப்பார்கள்.

30. தொடரில் இடம்பெற்றுள்ள மரபுப் பிழைகளை நீக்கி எழுதுக.
அ) பனை மட்டையால் கூரை வைத்திருந்தனர். ஆ) முருகன் சோறு சாப்பிட்டுப் பால் குடித்தான்.

## பகுதி - III பிரிவு - 1

**எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடை தருக.** 2 X 4 = 8

31. வருபவர் எவராயினும் நன்றி செலுத்து - இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.

32. நாட்டிய அரங்கின் அமைப்பை இளங்கோவடிகள் காட்சிப்படுத்தும் பாங்கு குறித்து உங்கள் கருத்தை எழுதுக.

33. பங்குனி உத்திரத் திருவிழா நடைபெற்ற முறையைத் திருஞான சம்பந்தர் எவ்வாறு பதிவு செய்கிறார்?

34. வாடைக்காலத்தில் கோவலர்கள் எவ்வாறு பாதுகாப்பைத் தேடினர்?

**பிரிவு - 2 எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடை தருக.** 2 X 4 = 8

35. பண்டைய விரிந்த குடும்பத்தின் தொடர்ச்சியே இன்றைய கூட்டுக்குடும்பம் - விளக்கம் எழுதுக.

36. மணலில் எழுதியது முதல் தற்காலம் வரை எழுதும் முறையில் ஏற்பட்டுள்ள மாற்றங்களைத் தொகுத்துரைக்க.

37. சங்கப் பாடல்களில் ஒலிக்கோலம் குறிப்பிடத்தக்க ஒரு பண்பாகும் விளக்குக.

38. வேளாண் மேலாண்மை குறித்து நீவிர் பரிந்துரைப்பனவற்றை எழுதுக.

**பகுதி - 3 எவையேனும் மூன்றனுக்கு மட்டும் விடை தருக.** 3 X 4 = 12

39. ஏகதேச உருவக அணி. *(அல்லது)* பொருள் வேற்றுமையணியைச் சான்று தந்து விளக்குக.

40. **பாநயம் பாராட்டல். (திரண்ட கருத்து, மையக்கருத்து, ஏற்புடைய நயங்கள் மூன்று அமைக்க)**

*பிறப்பினால் எவர்க்கும் - உலகில்*
*பெருமை வாராதப்பா!*
*சிறப்பு வேண்டுமெனில் - நல்ல*
*செய்கை வேண்டுமப்பா!*
*நன்மை செய்பவரே - உலகம்*
*நாடும் மேற்குலத்தார்!*
*தின்மை செய்பவரே - அண்டித்*
*தீண்டா ஒண்ணாதார்!*

**- கவிமணி**

41. அ) பாடாண் திணையைச் சான்றுடன் விளக்குக. *(அல்லது)* ஆ) பரிசில் துறையை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

42. 'எறும்பு ஊரக் கல்லும் தேயும்' *(அல்லது)* 'யானைக்கும் அடிசறுக்கும்' - என்னும் பழமொழியினை நும் வாழ்க்கை நிகழ்வில் அமைத்து எழுதுக.

43. **தமிழாக்கம் தருக.** 1) Learning is treasure that will follow its owner everywhere.
2) A new language is a new life. 3) Knowledge of languages is the doorway to wisdom.
4) If you people to understand you, speak their language.

**காதுகேளாதோர்க்கான வினா. கீழுள்ள பத்தியைப் படித்து விடையளிக்கவும்.**

தொடர்நிலைச் செய்யுள் வரிசையில் இரட்டைக் காப்பியங்களான சிலப்பதிகாரம், மணிமேகலை இரண்டும், தமிழ்மக்களின் வாழ்வியலைச் சொல்லும் கருவூலங்களாகத் திகழ்கின்றன. மணிமேகலை, ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்று. மணிமேகலையின் துறவு வாழ்க்கையைக் கூறுவதால், இந்நூலுக்கு 'மணிமேகலை துறவு' என்னும் பெயரும் உண்டு. இது பெண்மையை முதன்மைப்படுத்தும் புரட்சிக் காப்பியம். பண்பாட்டுக் கூறுகளைக் காட்டும் தமிழ்க்காப்பியம். இக்காப்பியம், சொற்சுவையும், பொருட்சுவையும், இயற்கை வருணனைகளும் நிறைந்தது. கதை அடிப்படையில் மணிமேகலையைச் சிலப்பதிகாரத்தின் தொடர்ச்சியெனக் கூறுவர். மணிமேகலைக் காப்பியத்தை இயற்றியவர் மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார். சிலப்பதிகாரம் இயற்றிய இளங்கோவடிகளும் இவரும் சமகாலத்தவர் என்பர். தண்டமிழ் ஆசான், நன்னூற் புலவன் என்று இளங்கோவடிகள் சாத்தனாரைப் பாராட்டியுள்ளார்.

அ) இரட்டைக் காப்பியங்கள் எவை? ஆ) இந்நூலுக்கு வழங்கப்படும் வேறுபெயர் யாது?
இ) சாத்தனாரின் சமகாலப் புலவர் யார்? ஈ) இளங்கோவடிகள் சாத்தனாரை எவ்வாறெல்லாம் பாராட்டியுள்ளார்?

## பகுதி - IV

**அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.** 3 X 6 = 18

44. அ) பண்பின் படிமமாகப் படைக்கப்பட்ட இராமன், பிற உயிர்களுடன் கொண்டிருந்த உறவு நிலையைப் பாடப்பகுதி வழி நிறுவுக. *(அல்லது)* ஆ) அறிவுடைமை வாழ்வின் உயர்வுக்குத் துணை நிற்கும் என்பதை வள்ளும் வழி நின்று நிறுவுக.

45. அ) குடும்பம் என்னும் சிறிய அமைப்பிலிருந்தே மனித சமூகம் என்னும் பரந்த அமைப்பு கட்டமைக்கப்படுகிறது - எவ்வாறு? விளக்குக. *(அல்லது)*
ஆ) நிருவாக மேலாண்மை குறித்து வெ. இறையன்பு கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

46. அ) சங்ககால வரலாற்றை அறிந்துகொள்ள, புகளூர்க் கல்வெட்டு எவ்வகையில் துணைபுரிகிறது? - விளக்கு. *(அல்லது)*
ஆ) பாரதியின் கடிதம் வாயிலாக நீங்கள் அறிந்துகொண்ட மொழிப்பற்று சமூகப்பற்று ஆகியவற்றை விளக்குக.

## பகுதி - V

47. **அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக.** 4 + 2 = 6
அ) "ஒருமையுடன் நினதுதிரு ......" எனத் தொடங்கும் தெய்வமணிமாலை பாடலை அடிபிறழாமல் எழுதுக.
ஆ) 'நன்று' என முடியும் குறளை எழுதுக.



Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com